[1992 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 632, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

632—

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிட வசதி.

* 3799 திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாயில்பட்டி, மாரனேரி, நாரணாபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிட வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாயில்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நிலம் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாரனேரி, மற்றும் நாரணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகிலேயே தமிழகத்தில்தான் இன்னும் கூடியவரையில் எந்த நோயும் இல்லை என்ற ஒரு சிறப்பு பெயர் எடுக்கும் நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மருத்துவ முகாம்களின்கீழ் ஏற்பட்டுள்ளது. அந்த ஒரு சிறப்பு நிலை இருக்கும் நிலையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே சிவகாசியை ஒட்டியுள்ள மாரனேரி மற்றும் நாரணாபுரம் கிராமங்களிலே 5 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேற்பட்ட மக்கள் தொகை வசிக்கின்ற காரணத்தாலும், எல்லோருமே அந்த ஸ்டாண்டர்ட் ஆஃப் லிவிங் நிலைக்கு குறைந்த நிலையில் உள்ளதாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே உடனடியாக ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டித் தர முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதிலே 3 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே ஒன்றுக்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு 17—9—1991 அன்று பொதுப் பணித் துறையிடத்திலே நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டிற்கும் இப்போது துவங்குவதற்கான வாய்ப்பு இல்லை. மாரனேரியிலே 10 ஆயிரம் ரூபாய் பொது நிதியாக அங்குள்ள பொது மக்கள் வசூல் பண்ணி அரசாங்கத்திலே கட்டியிருக்கிறார்கள். மற்றொரு இடமான நாரணாபுரத்திலே அவர்கள் கட்டவில்லை. அதற்குண்டான இடமும் கிடைக்காமல் இருக்கிறது. எனவே, அவை எல்லாம் கிடைக்கிறபோது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாரணாபுரம் கிராமத்திலே வாழ்கிற மக்கள் அடிப்படை வசதி கூட இல்லாமல் மிக தரம் தாழ்ந்து வாழ்கிறார்கள். எனவே அவர்கள் அந்த 10 ஆயிரம் ரூபாயை கட்ட முடியவில்லை. இருந்தாலும் அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டு வருகிறது. அங்கே மனிதர்கள் எல்லாம் சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்றால் மிருகங்களைப்போலதான் கண்ட இடங்களில் நிற்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த சூழ்நிலையை மாற்றி உடனடியாக நாரணாபுரத்திற்கும் சேர்த்து ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கு ஏற்பதான் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆரம்பத்திலேயிருந்தே, அநேகமாக இந்த 9, 10 மாத காலத்திலேயே புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம் பல்வேறு திட்டங்களை இதற்காக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையிலேயிருந்து எத்தனை ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட முடியுமோ அதைத்தான் நாம் கட்ட முடியும். அவர்களுடைய பகுதியிலே, குறிப்பாக அவர்களுடைய தொகுதியிலேயே அவருக்காக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஒதுக்கப்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. எனவே, நிதிநிலை சரியாக அமைகிறபோது அதை எல்லாம் சீர் செய்வதற்கான நடவடிக்கையை இந்தத் துறை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 633, திரு. கே. பி. மணிவாசகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.